ARCHDIOCESE of KUALA LUMPUR

***பேராயரின் செய்தி***

***தவக்காலப் பிரச்சாரம் 2024***

தவக்காலம் என்பது கிறிஸ்துவின் தனிப்பட்ட பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் கொண்டாட நம்மைத் தயாரிக்கும் ஒரு புனிதத்தின் காலம். எதிர்நோக்கோடு பிறருக்குப் பணி செய்ய இந்த நாற்பது நாட்களையும் பயன்படுத்துகிறோம். தொடர்ந்து முழு வாழ்க்கையிலும் அதிகமாக இதைச் செய்ய கற்றுக்கொள்கிறோம்.

அண்டை அயலாரிடம் தன்னலமின்றி அக்கறைக் காட்ட வேண்டுமென்பதை ஆண்டவர் நமக்கு அவரின் மக்களின் வழியாகக் கற்றுத் தருகிறார்.

இதனால், நம்மைப் பிறர் எவ்வாறு நடத்தவேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அவ்வாறு நாம் பிறரை நடத்தவேண்டுமென்று கூறுகிறார்.

நம்முடைய அண்டைய அயலாராக யார் இருக்கவேண்டும் என்பதை நாம் முடிவுசெய்யவேண்டாம் என்று அவர் நம்மைக் கேட்கிறார். மாறாக நாமே அனைவருக்கும் அயலாராக இருப்போம்.

நாம் பதுங்கு குழிக்குள் வாழக்கூடாது; ஆனால் வெளியே சென்று இனம், நம்பிக்கை, அல்லது பின்னனியைப் பாராது அனைத்து மக்களுக்கும் சமூகங்களுக்கும் பணி செய்யவேண்டும்.

எனவே, என் அன்பான கடவுளின் மக்களே, இத்தவக்கால 40 நாட்களும் தர்மாரியங்கள், உண்ணாநோன்பு மற்றும்  இறைவேண்டலும் நிறைந்த ஆசீர்வாதமான அருளின் காலமாக அமையவும் இதனால் உங்கள் வாழ்க்கையில் மேலும் மேலும் கிறிஸ்துவைப் பின்பற்றிடவும்  உங்களை வாழ்த்துகிறேன்.

**பேராயர் ஜூலியன் லியூ பெங் கிம்**